# "அரசாட்சி: இது தீவிரமான விவகாரம்"

அருண் ஜேட்லி

**(எதிர்கட்சித் தலைவர், மாநிலங்களவை)**

அரசாட்சி என்பது திட்டங்களை வரையறுத்தலையும் அவற்றின் செயல்படுத்துதலையும் உள்ளடக்கியது. திட்டங்கள் திடமான்வையாகவும் கொள்கை சார்ந்தவையாகவும் இருக்க வேண்டும். அவற்றை செயல்படுத்துதில் நேர்மையும் வெளிப்படைத்தனமையும் கடைபிடிக்கப்படவேண்டும். நல்லாட்சிக்கு சாதகமான விளம்பரம் பெறுவதை புத்திசாலித்தனமான அரசியல் உத்தியாக ஏற்கலாம். நல்லாட்சியைத் தராமல் விளம்பரம் செய்துகொள்வது வெற்று ஜாலம் மட்டுமே.

தில்லியில் ஆம் ஆத்மி கட்சி அமைத்திருக்கும் புதிய ஆரசுக்கு வாக்காளர்கள் அதன் மீது வைத்த நம்பிக்கைக்கு எதிரிவினையாற்றும் அரிதான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. வாக்காளர்கள் அவர்களின் தெரிவுகளைத் தீர்மானிப்பதில் இரக்கம் காட்டுவதில்லை. ஜனநாயகத்தின் உள்ளார்ந்த சக்தி அதுதான். அரசைத் தீர்மானிக்கும் மக்கள் செயலாற்றத் தவறியவர்கள் மீதான கோபத்தையும் காட்டிவிடுவார்கள். ஆம் ஆத்மி கட்சியின் அரசு தனித் தன்மையான ஆட்சிப் பாணி என்பதை வலுவான ஆட்சிக்கு மாற்றாக குழப்பிக்கொண்டுள்ளது. ஆட்சிமுறையைப் பின்பற்றும் உரிமை அக்கட்சிக்கு இருக்கலாம். ஆனால் மரபுசாராத பாணி என்பது வலுவான ஆட்சிக்கு மாற்றாக முடியாது.

தில்லியின் முன் இரண்டு சவால்கள் இருக்கின்றன. அடிப்படை வசதிகள் கூட இல்லாத வாய்ப்புகள் மறுக்கப்பட்ட தில்லி ஒருபுறம். உலகளாவிய நகரமாக உயரத் துடிக்கும் தில்லி மறுபுறம். தில்லியை ஆளும் அரசு இந்த இரு சவால்களையும் எதிர்கொண்டாக வேண்டும் வலுவான ஆட்சியைத் தராமல் அரசாட்சிப் பாணி சார்ந்த விளம்பரம் தேடிக்கொண்டிருப்பது வெற்று ஜாலம் மட்டுமே. பொறுப்புடைய அரசாட்சிக்கு நீண்ட கால தாக்கம் இருக்கும். ஜாலங்கள் குறைந்த ஆயுள் கொண்டவை. ஜாலங்கள் எப்போதும் அவற்றின் காலடித் தடங்களை விட்டுச் செல்வதில்லை. அளவுகடந்த ஜாலங்கள் நகைப்புக்குரியவையாகிவிடும். பொருளற்ற தொடர் ஜாலங்கள் பொதுமக்களின் எள்ளலையும் கோபத்தையும் ஈர்க்கக் கூடியது. ஆம் ஆத்மி அரசு அதன் பாணியின் பலிகடாவாகிக்கொண்டிருக்கிறது. .இதை மிக விரைவில் புரிந்துகொண்டால் அக்கட்சி தன் தவற்றைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பைப் பெறும்.